**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இரணியல்</u>**

முன்னிலை திரு. **A.S.அமீர்தீன்,** B.A.,B.L., LLM.,D.JJJ.Psy.,

நீதித்துறை நடுவர்

**2024** ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் **12** ஆம் நாள் **வியாழக்கிழமை**

**<u>Crl.M.P.No.41/2023</u>**

அ.வேலப்பன் பிள்ளை (வயது 75/2024) .............. புகார்தாரர்
த/பெ. அய்யப்பன் பிள்ளை,
10–107, கோட்டைக்ககம்,
கண்டன்விளை அஞ்சல்

/எதிர்/

1. சந்திரசேகர் (வயது 58/2024) ................ 1ம் எதிர்மனுதாரர்
த/பெ. தங்கராஜ்
2–119/1, பிராவேலிவிளை,
குலசேகரம் B கிராமம்,
குலசேகரம் அஞ்சல்

2. சித்ரா (வயது 41/2024) ................ 2ம் எதிர்மனுதாரர்
க/பெ. ராஜன்,
10–91, பறையன்விளை,
திங்கள்நகர்

புகார்தாரர் இப்புகாரை முதலில் கு.வி.மு.ச 1973 பிரிவு 156(3)ன் கீழ் தாக்கல் செய்து பின்னர் இந்நீதிமன்றத்தால் 26.04.2023 ஆம் தேதி மேற்படி புகார்தாரருக்கு கு.விமு.ச 1973 பிரிவு 200ன் கீழ் தாக்கல் செய்ய அனுமதி அளித்ததன் அடிப்படையில் குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 190(1)(அ) உ/இ பிரிவு 200ன் கீழ் தாக்கல் செய்துள்ளார். மேற்படி புகார்தாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.அரசமுத்து பதிவில் இருந்தும், வழக்கில் சமர்பிக்கப்பட்ட வாக்குமூலங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று **(12.09.2024)**இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.........

**// உத்தரவு //**

**1. <u>புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட புகாரின் சங்கதிகளின் சுருக்கம்</u>**

புகார்தாரர் வேலப்பன்பிள்ளை எதிர்மனுதாரர்கள் 1 முதல் 3 வரையிலான நபர்களுக்கு எதிராக இந்நீதிமன்ற கு.ப.வ.ம.எண் 41/2023ன்படி கு.வி.மு.ச 1973 பிரிவு 156(3)ன் கீழ் மனுதாக்கல் செய்து மேற்படி மனுவானது 30.01.2023 ஆம் தேதி அனுமதிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் போலீசார் விசாரித்து மேற்படி புகார்மனுவில் எந்தவித முகாந்திரமும் இல்லை என்பதால் மேற்படி மனுமீதான விசாரணையை முடித்ததன் அடிப்படையில் பாதிக்கப்பட்ட புகார்தாரரின் புகாரானது தனிநபர் முறையீடாக பாவிக்கப்பட்டு, அதன் அடிப்படையில்...........

மேற்படி புகாரில் மேற்படி வேலப்பன்பிள்ளை ஒய்வு பெற்ற அஞ்சலக ஊழியர் என்பதும், அவர் தன்னுடைய இடத்தில் கல்யாண மண்டபம் கட்டி முடித்தாகவும், மேற்படி கல்யாண மண்டபம் அபிவிருத்திக்காக பணம் தேவைபட்டதாகவும், புதுமை லெட்சுமி என்ற நபர் மூலம் **(மேற்படி புதுமை லெட்சுமி தனிநபர் புகாரில் எதிர்மனுதாரர் நிலையிலிருந்து**

SYEDMOHAMED AMEER DHEEN

Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2024.09.12 18:51:48 +0530

**புகார்தாரரால் நீக்கம் செய்யப்பட்டு சாட்சியாக மாற்றம் செய்யப்பட்டார்)** திரவிய ராஜ் என்பவருடன் சேர்ந்து மேற்படி சந்திரசேகர் வட்டிக்கு கடன் கொடுத்து வருவதாகவும், அவரிடம் வட்டிக்கு பணம் வாங்கி தருவதாகவும், அதற்கு தன்னுடைய சொத்தில் 4 1/2 சென்ட் இடத்தை அடமானமாக எழுதிக் கொடுத்தால் பணம் தரமுடியும் என்று மேற்படி சந்திர சேகர் கூறியதாகவும், அதன் அடிப்படையில் மேற்படி சொத்தினை அடமானமாக எழுதிக் கொடுத்ததாக கூறப்பட்டுள்ளது.

மேற்படி, பரிவர்த்தனைக்காக புதுமைலெட்சுமி ரூபாய் 85,000/– தன்னிடமிருந்து பெற்றுக் கொண்டதாகவும், மேற்படி அடமான ஆவணத்தை தனக்கு வாசிக்க கொடுக்காமல் அதில் என்ன எழுதப்பட்டது என்று காட்டாமல் அடமானம் எழுதப்பட்டுள்ளதாக சொல்லி, தன்னை நம்ப வைத்து ஆவணம் ஒன்றை பதிவு செய்து கொண்டதாகவும், மேற்படி புதுமைலெட்சுமி தன்னுடைய மற்ற இரண்டு சொத்துக்களுக்கான அசல் ஆவணங்களை வாங்கிச் சென்றதாகவும், அதில் ஒன்று அடமானம் சம்மந்தப்பட்டது என்றும், அதில் கடன் எதுவும் வாங்கவில்லை என்றும், மேற்படி ஆவணத்தை புதுமைலெட்சுமி தராமல் அவர் வசமே வைத்துக் கொண்டு மிரட்டி வருவதாகவும், கூறப்பட்டுள்ளது.

மேற்படி சந்திரசேகர் கடன் தரும் போது 18% வட்டிக் கேட்டதாகவும், அடமானம் பதிவு செய்துவிட்டு வந்தவுடன் 60% வட்டி வேண்டும் என்று கேட்டதாகவும், தனக்கு இருந்த கஷ்ட சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு மேற்படி வட்டியை கொடுத்தாகவும், செலுத்த வேண்டிய மொத்த வட்டி ரூபாய் 5,10,000/–த்தில் பல தவணைகளாக ரூபாய் 2,54,000/–த்தை வட்டியாக கொடுத்தாகவும், அதில் வட்டி பாக்கியாக ரூபாய் 2,56,000/–ம் மட்டுமே செலுத்த வேண்டியுள்ளது என்றும், மேற்படி சொத்து தன்னுடையது என்று, சந்திரசேகரும், அவருடைய ஆள்களும் கூறியதாகவும், மேற்படி சொத்தை தன்னை ஏமாற்றி சந்திரசேகர் கிரயம் பெற்றுள்ளது தனக்கு தெரிய வந்ததாக கூறப்பட்டுள்ளது.

மேற்படி மோசடி குறித்து நான் கேட்ட போது புகார்தாரரை கொலை செய்து விடுவதாக மிரட்டியதால் தான் உடனே புகார்கொடுக்க முடியவில்லை என்றும், 2019 ஆம் ஆண்டு முதல் எந்தவித நடவடிக்கையும் மே மாதம் 2022 வரை எடுக்கவில்லை என்றும் தான் போலீசில் புகார் கொடுப்போன் என்பதை உத்தேசித்து 2ம் எதிர்மனுதாரரான சித்திரா என்பவருக்கு பினாமி கிரயம் செய்து கொடுத்துவிட்டதாகவும், மேற்படி கிரயம் பற்றிய விவரம் தனக்கு 31.05.2021 ஆம் தேதி தெரிய வந்தவுடன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், தான் வாங்கிய ரூபாய் 17,00,000/– கடனுக்காக ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்தை மோசடியாக எழுதி வாங்கிக் கொண்டதாக கூறப்பட்டுள்ளது.

மேலும், அடமானமாக பதிவு செய்த காலகட்டத்தில் மேற்படி இடம் தன்னுடைய பொறுப்பில் இருந்தது என்றும், மேற்படி சம்பவம் குறித்து காவல் துறையில் புகார்கொடுத்த போது மேற்படி சந்திரசேகர் 04.07.2022 ஆம் தேதி முன்னிலையாகி வட்டிக்கு பணம் கொடுத்த விவரத்தை வாய்மொழியாக ஒப்புக் கொண்டார் என்றும், மேற்படி சங்கதிக்கு ஆதரவாக ஆவணங்கள் தரப்படவில்லை என்றும், எனவே இம்மனு மீது விசாரணை நடத்தி மேற்படி எதிர்மனுதாரர்களுக்கு எதிராக"The Tamil Nadu Prohibition of Charging Exorbitant Interest Act 2003ன் படியும், இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 294(b), 406, 420, 423, 441, 108,

SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2024.09.12 18:51:56 +0530

109, 112, 120B, 506 பத்தி இரண்டின் கீழ் நியாயம் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது.

2. **இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா ? என்பதேயாகும்.**

புகார்தாரர் தரப்பில் 6 சாட்சிகள் முதலில் சொல்லப்பட்டு பின்னர் மொத்தம் 16 சாட்சிகள் முன்னிறுத்தப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. புகார்தாரர் தரப்பில் மேற்படி புதுமைலெட்சுமி என்பவரை முதலில் குற்றம் சுமத்தப்பட்ட நபராக சேர்க்க வேண்டும் என்று வேண்டுகோள் வைக்கப்பட்டு பின்னர் மேற்படி நபரை சாட்சியாக விசாரிக்க வேண்டும் என்று வேண்டுகோள் வைக்கப்பட்டு, மேற்படி புதுமை லெட்சுமி குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்ற படிநிலையிலிருந்து சாட்சி என்ற படி நிலைக்கு புகார்தாரரால் மாற்றம் செய்யப்பட்டார்.

புகார்தாரர் தரப்பில் 1வது சாட்சி வேலப்பன்பிள்ளை தனது வாக்குமூலத்தில் பிரதான மனுவில் என்ன கூறினாரோ அதே தான் கூறியுள்ளார். ஆனால் இதில் புதுமை லெட்சுமியை பொறுத்து அவர் மீது எந்த தவறும் இல்லாதது போல் ஒரு வாக்குமூலத்தை இந்நீதிமன்றத்தின் முன் சமர்பித்துள்ளார்.

2வது சாட்சியான திரவிய ராஜ் விசாரணை வாக்குமூலத்தில் மேற்படி பத்திர பதிவை பொறுத்து தான் அடமான பத்திரத்தில் கையெழுத்து போட்டதாகவும், தான் அடமான பதிவை பார்த்தாகவும், அந்த பத்திரத்தில் சாட்சி கையொப்பம் போட்டதாகவும், பின்னர் மேற்படி பத்திரம் விற்பனை பத்திரம் என்று தனக்கு தெரிய வந்ததாகவும், வாக்குமூலம் அளித்துள்ளார்.

புகார்தாரர் தரப்பில் 3வது சாட்சியான புதுமை லெட்சுமி தனது விசாரணை வாக்குமூலத்தில் தான் பார்த்த போது அடமான பத்திரம் தான் என்று எழுதப்பட்டிருந்தது என்றும், அதில் தன்னை சாட்சியாக போடவில்லை என்றும், மேற்படி பண பரிவர்த்தனை குறித்து உறுதி செய்யப்பட்ட பிறகு மேற்படி பரிவர்த்தனை நடைபெற்றது என்றும், தான் தான் வட்டி பணத்தை மேற்படி சந்திர சேகருக்கு கொடுத்தாகவும், ரூபாய் 51,000/- பணம் கொடுத்ததற்கு தனக்கு ரூபாய் 1,000/- சந்திர சேகர் கொடுத்தாகவும், மேற்படி பத்திரம் குறித்து புகார்தாரர் தன்னிடம் மேற்படி சந்திரசேகர் விற்றுவிட்டதாக தன்னிடம் சொன்னதாக வாக்குமூலம் அளித்துள்ளார்.

புகார்தாரர் தரப்பில் 4வது சாட்சியான முருகன் என்பவர் தனது விசாரணை வாக்குமூலத்தில் தான் மேற்படி பத்திர பதிவு அன்று புகார்தாரருக்கு வாகனம் ஓட்டியதாகவும், தான் புகார்தாரருடன் அழகியமண்டபம் பிஸ்மி ஓட்டலுக்கு சென்று அங்கு வைத்து ஒரு நபரிடம் ரூபாய் 51,000/-ம் வட்டி கொடுத்தாகவும், தான் ஏமாற்றப்பட்டதாக புகார்தாரர் தன்னிடம் சொன்னதாகவும் வாக்குமூலம் அளித்துள்ளார்.

புகார்தாரர் தரப்பில் 5வது சாட்சியாக விசாரிக்கப்பட்ட காவல் ஆய்வாளர் செந்தில் வேல்குமார் தனது விசாரணை வாக்குமூலத்தில் தான் புகார்தாரர் கொடுத்த மனுவினை விசாரித்து மேற்படி புகார்தாரர் தரப்பில் கொடுக்கப்பட்ட புகாரில் உண்மைக்கு

SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2024.09.12 18:52:03 +0530

முரணானது என்று தான் முடித்துவிட்டதாகவும், அது சம்மந்தமாக அறிக்கை தாக்கல் செய்துவிட்டதாகவும் வாக்குமூலம் அளித்துள்ளார்.

புகார்தாரர் தரப்பில் 6வது சாட்சியாக விசாரிக்கப்பட்ட கமல் ஜார்ஜ் தனது விசாரணை வாக்குமூலத்தில் தான் மேற்படி பத்திரத்தை பதிவு செய்தது சம்மந்தமாக வாக்குமூலம் அளித்துள்ளார். அதில் 2வது சாட்சியான திரவியராஜின் சாட்சியின் அடையாள அட்டையை பொறுத்து அதன் எண் காணப்படவில்லை என்றும், மேற்படி திரவிய ராஜ் கன்னியாகுமரி மாவட்டத்தை சார்ந்தவர் அல்ல என்பதும், திருநெல்வேலி மாவட்டத்தை சேர்ந்தவர் என்றும் ஆவணங்களில் தெரிய வருகிறது என்றும் வாக்குமூலம் சமர்பிக்கப்பட்டுள்ளது.

புகார்தாரர் தரப்பில் 7வது சாட்சியாக விசாரிக்கப்பட்ட ரஞ்சித்குமார் வங்கி அலுவலர் தனது விசாரணை வாக்குமூலத்தில் மேற்படி பத்திரத்திற்கான பண பரிவர்த்தனை குறித்த இணையதள சங்கதிகள் குறித்து வாக்குமூலம் அளித்துள்ளார்.

புகார்தாரர் தரப்பில் 8வது சாட்சியாக விசாரிக்கப்பட்ட சரோஜா தனது விசாரணை வாக்குமூலத்தில் தான் மேற்படி சந்திரசேகர் கடையில் சிறிது காலம் வேலை பார்த்தாகவும், மேற்படி பத்திரத்தில் தான் கையொப்பம் போட்டதாகவும், ஆனால் மேற்படி ஆவணத்தை படித்து பார்க்கவில்லை என்றும், கிரயபத்திரம் என்று தான் இருந்ததாகவும், அதில் தான் பதிவு அலுவலகத்தில் வைத்து கையொப்பம் போட்டு கொடுத்தாகவும் வாக்குமூலம் அளித்துள்ளார்.

புகார்தாரர் தரப்பில் 9வது சாட்சியாக விசாரிக்கப்பட்ட சார்பதிவாளர் குலோத்துங்கன் தனது விசாரணை வாக்குமூலத்தில் புகாரில் மேற்படி சந்திர சேகர் சித்திரா என்பவருக்கு விற்பனை செய்ததாக குறிப்பிடப்பட்ட Ex.P.1 என்ற ஆவணம் அவரால் பதிவு செய்யப்பட்டது என்றும், மேற்படி பணபரிவர்த்தனை தன் முன்னால் எதுவும் நடைபெறவில்லை என்றும், மேற்படி ஆவணத்திற்கு முன் ஆவணமான 4269/2019ஐ பொறுத்து மேற்படி ஆவணத்திற்கான பணபரிவர்த்தனை வங்கி மூலமாக நடந்தது என்றும் வாக்குமூலம் அளித்துள்ளார்.

புகார்தாரர் தரப்பில் 10, 11, 12, 13, 14, 15, 16 சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட மேற்படி இரணியல் சார்பதிவாளர் அலுவலகத்தி பணிபுரிந்த மேற்படி காலகட்டங்களின் சார்பதிவாளர்கள் தங்களது வாக்குமூலத்தில் இவ்வழக்கு சம்மந்தமாக தங்களை இரணியல் காவல் நிலையத்தில் விசாரிக்கவில்லை என்று தங்களது விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார்கள்.

மேற்படி விசாரணை வாக்குமூலங்களிலிருந்து புகார்தாரர் வேலப்பன்பிள்ளை அடமானம் என்று கூறி தன்னை ஏமாற்றி கிரயம் என்று சொத்தினை பதிவு செய்துவிட்டதாகவும், அதற்கு ஆதரவாக சூழ்நிலை சாட்சியங்களை முன்னிறுத்தியுள்ளதாகவும், மேற்படி குற்றம் சுமத்தப்பட்ட நபராக முதலில் பாவிக்கப்பட்ட மேற்படி புதுமைலெட்சுமி பின்னர் சாட்சியாக ஏன் வந்தார் என்ற சந்தேகமும் மேற்படி புதுமை லெட்சுமி மேற்படி பண பரிவர்த்தனையின் போது உடன் இருந்துள்ளார் என்பதும் தெரியவருகிறது.

SYEDMOHAMED AMEER DHEEN

Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2024.09.12 18:52:11 +0530

மேற்படி புகார்தாரர் கூறிய சங்கதிகளை பொறுத்து ஒரு கிரய ஆவணத்தை ரத்து செய்வதற்கு உரிய உரிமையியல் நீதிமன்றத்தின் மூலம் மட்டுமே வழக்கு தொடுக்க முடியும் என்றாலும், இப்புகாரில் வரம்பு கடந்த வட்டி என்ற வரையறைக்குள் தான் பணம் கொடுத்தாக வாக்குமூலங்கள் சமர்பிக்கப்பட்ட நிலையில் கேள்விநிலை சாட்சியங்களை தவிர்த்து நேரடிசாட்சியங்களை பொறுத்து இந்நீதிமன்றத்திற்கு மேற்படி ஆவணத்தை பொறுத்து எந்தவித பரிகாரமும் இவ்வழக்கில் கேட்கமுடியாது என்றும், மற்ற சங்கதிகளை பொறுத்து இந்நீதிமன்றம் மேற்படி புகார்தாரர் கூறியுள்ள சங்கதிகளை பொறுத்து அடிப்படை முகாந்திரம் இருக்கிறது என்றும், மேற்படி நிலையை விரிவான விசாரணையின் போது மட்டுமே வெளிக் கொண்டு வரமுடியும் என்பதால் இப்புகாரினை இந்நீதிமன்றம் கோப்புக் எடுத்து விசாரணை நடத்த முடிவு செய்கிறது.

எனவே மேற்படி புகாரினை பொறுத்து மேற்படி **சந்திரசேகருக்கு மட்டும்** எதிராக **இந்திய தண்டனை சட்டம் 1860 பிரிவுகள் 294(b), 506 பத்தி இரண்டு மற்றும் பிரிவு 6 தமிழ்நாடு வரம்பு கடந்த வட்டியை தடை செய்யும் சட்டம் 2003ன் கீழ்** வழக்கினை கோப்புக்கு எடுக்கவும், 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து எந்தவித முகாந்திரமும் தற்போதைய சூழ்நிலையில் இல்லாததால் அவர் மீது எந்த நடவடிக்கையும் இல்லை என்றும், வழக்கு விசாரணையின் போது போதிய சாட்சியம் இருந்தால் அவரை பின்னர் வழக்கில் தரப்பினராக சேர்க்கலாம் என்றும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இவ்வுத்தரவு வாய்மொழியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு பின்னர் **2024**ஆம் ஆண்டு **செப்டம்பர்** மாதம் **12** ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SYEDMOHAMED AMEER DHEEN

Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2024.09.12 18:52:17 +0530

நீதித்துறை நடுவர்
இரணியல்

Judicial Magistrate Court, Eraniel

Court Seal

"The parties shall apply, as soon as possible, for the return of all exhibits which they may wish to preserve, as the record will be liable to be destroyed after three years from this date".